முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணப்ப நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.05.2024,** வெள்ளிக்கிழமை

1. ஞானகுருவே அரங்க மகானே
ஞானிகள் பூசை வழிமுறையை
வானவர்கள் மெச்ச அருளுகின்ற
வள்ளலே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை குரோதி தகர் திங்கள்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 27 ம் நாள், 10.05.2024, வெள்ளிக்கிழமை)
அய்யைந்தீர் திகதி புகர் வாரம்
3. வாரமதில் கண்ணப்ப நாயனாரும்
வழங்குவேன் உலக நலம்பெற
பாரதமெங்கும் தருமபலம் உருவாக்கி
பண்பான தருமவான்கள் படைகளை
4. படைகளை நிரப்பி ஞான சேவை
பழுதில்லா ஆற்றும் அரங்கன் வழியை
தடையற ஏற்று மக்கள் வர
தரணியே தரும பலம் காணும்
5. காணவே சன்மார்க்க நெறியை
கண்ணியமிக்க வாழ்வு நெறியாக
ஞான தேசிகன் அருளி வர
நம்பிக்கை வைத்து மக்கள் வர
6. வருகவே வையகத்தில் மாற்றம்
வருங்காலம் மாற்றும் சக்திகளாக
தருமவான்களும் ஞான வான்களும்
தவராஜன் ஆசியால் உருவாகி
7. உருவாகி உலகெல்லாம் ஞானவழி
உண்மை வழிகளாக மாறி
ஆறுமுகப் பெருமான் வழிபாடாக
அகிலமே சரவண சோதி ஏற்றி

8. ஏற்றி வணங்கித் தொடர
எல்லாத் திக்கிலும் வேலவன்
ஆற்றல் பெருகிட இனிதே
அற்புதம் ஞானத் தலைமையாக
9. ஆகவே மக்களால் தேர்வு
அரங்கன் சீடர்கள் சேர
வகையான ஆன்மீக ஞான
வல்லமைமிக்க அரசியல் களமாக
10. ஆகவே கட்டமைப்பு கூடி
அகிலம் வியக்க மாற்றம்
மகான்கள் வெளிப்பட காணும்
மக்களெல்லாம் மகிழ்வுற இனிதே
11. இனிதே ஞானிகள் ஆட்சி
இந்தயுகமே ஞானயுகமாகிட
கனிவேலன் ஆசி அனுகூலம் கூடும்
கண்டுரைத்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–